# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று : 15 சுகந்தம் : 61 (தை - பங்குனி) - 2024



**ஏ. பீர்முகம்மது**
**(இரண்டாம் விசுவாமித்திரன்)**

**200/-**

தேசிய ... குடும்ப சஞ்சிகை !

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரூபா. 86,000 ஐச் செலுத்தி மோட்டார் சைக்கிள் ஒன்றை கொண்டு செல்லுங்கள்

YAMAHA
Revs Your Heart

2 YEAR WARRANTY




BLUE CORE




149CC புதுமிகை என்ஜின் உடன் எரிபொருள்
ABS பிரேக்
இன்ஜெக்ஷன் எலெக்ட்ரிக் ஸ்டார்ட்
கருவி பலகை உடன் எக்கோ காட்டி
12 லீட்டர் எரிபொருள் தாங்கி
இரண்டு வரிசையான நிற டிசைன்
முன் பக்க மற்றும் பின் பக்க பிரேக் டிஸ்க்

03 FREE SERVICE
FREE
FREE

149CC புதுமிகை என்ஜின் உடன் எரிபொருள்
இன்ஜெக்ஷன்
எலெக்ட்ரிக் ஸ்டார்ட்
கருவி பலகை உடன் எக்கோ காட்டி
12 லீட்டர் எரிபொருள் தாங்கி
இரண்டு வரிசையான நிற டிசைன்

568A, Trinco Road, Batticaloa. 065 2227333, 077 4650754, 077 6328484, 0773268484, 077 9868484, 076 6604848

காட்சியறைகள் வாழைச்சேனை 065 225 888, ஏறாவூர் 076 911 1652, கொக்கட்டிச்சோலை 077 497 8484, வவுணதீவு 077 332 2570

## மாபெரும் விலைக் கழிவுக் கொண்டாட்டம்

# ரூபா. 50,000 ஐச் செலுத்தி Scooter ஒன்றினை கொண்டு செல்லுங்கள்

64 ஆண்டு விழா

YAMAHA
Revs Your Heart

# YAMAHA PLAZA

Sales, Service & Spare Separts

AD / 0045

2 YEAR WARRANTY










113CC புதுமிகை திறனுள்ள என்ஜின்
நாகரீகமான மீட்டர் உள்ளடக்கி
நாகரீகமான இரு நிறங்கள்
ஆசனத்தன் கீழ் பெரிய பொதியறை
பெரிய 250 காஸ் பதிவுத்தட்டு
66KMPL எரிபொருள் திறன்

113CC புதுமிகை திறனுள்ள நடுவே உள்ளடக்கிய இயந்திரம்
குளிரூட்டும் பொறிகளின் தொகுதி
ஆழமாகச் செதுக்கப்பட்டது போன்ற முன் பகுதி
ஆசனத்தின் கீழான பெரிய பொதியறை
66KMPL எரிபொருள் திறன்

முன் டிஸ்க் பிரேக்கும்
அலோய் வீல்களும்
புதிய டிஜிட்டல் மீட்டர்
நக்கிள் கார்ட்
21L ஆசனத்துக்குக் கீழான
பெரிய பொதியறை
1L க்கு 66Km ஓடக்கூடிய எரிபொருள்
சிக்கனத்திற்கான என்ஜின்

568A, Trinco Road, Batticaloa. 065 2227333, 077 4650754, 077 6328484, 0773268484, 077 9868484, 076 6604848

காட்சியறைகள் வாழைச்சேனை 065 225 888, ஏறாவூர் 076 911 1652, கொக்கட்டிச்சோலை 077 497 8484, வவுணதீவு 077 332 2570


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பம் : 15.01.2024

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே : 077-6989597
பெக்ஸ் : 065-2227542
Email:kirupabatticaloa@yahoo.com
இணையம்:www.thendralbook.com

ஆசிரியர் / வெளியீட்டாளர்
**கதிரேசபிள்ளை கிருபாகரன்**

**ஆசிரியர் குழு**

கலாபூஷணம் மு. தம்பிப்பிள்ளை
கலாபூஷணம் இ. கோபாலப்பிள்ளை
திருமதி. கவிதா கிருபாகரன்
கலாபூஷணம் ஆ. அரசரெத்தினம்
செல்வி. த. செல்வராணி

**ஓவியம்**
சி. புரவர்த்தினி

**ஆக்கங்களுக்கு ஆக்கியோரை பொறுப்பாளிகளாவர். (ஆ-ர்)**

**உள்ளே....**

❖ இவர்கள் மனிதர்கள்
ஆசிரியர் கருத்து........... 02
❖ தென்றலின் தேடல்........ 03
❖ கவிதைகள்
1. படைத்தவனைப் பழி வாங்குவேன்.................. 11
2. சொல்லாமலே................ 18
3. வாழ்வின் நிலை........... 29
4. கல்விக் கலைமகளே!.... 33
❖ சிறுகதைகள்
1. தண்டனை யாருக்கு?......... 13
2. வாழ்வின் நிலை!.................31
❖ கட்டுரைகள்
1. தென்றல் சஞ்சிகையின் 60ஆவது இதழ் வெளியீடும், கலைஞர் கௌரவிப்பும்.......................... 19
2.பாரம்பரியம் தொலைத்த வாழ்க்கை!.................... 34
❖ நீத்தார் நினைவு................ 37
❖ புதிய வரவுகள்.................. 39
❖ வாசகர் நெஞ்சம்.............. 40

தென்றலின் ஆண்டுச்சந்தா 1000/- ரூபாவை மக்கள் வங்கி கணக்கிலக்கம் - 113200152181 இல் வைப்பிலிட்டு உதவுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் மனிதர்கள்!

**வா**ழ்க்கையில் நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால் கஷ்டங்கள், இழப்புக்கள், வெறுப்புக்கள், வேதனைகள் எனப் பல விடயங்களை நாம் சந்தித்திருப்பினும் கூட அவை அனைத்துக்கும் அப்பால் சில சின்னச் சின்ன சந்தோஷங்கள் இல்லாமல் இல்லை. இந்தக் கஷ்டங்கள், கவலைகள், வேதனைகள், வெறுப்புக்கள் என்பதெல்லாம் நாம் செய்த பாவங்கள், விளைவுகள் எனக் கூறப் பட்டாலும் கூட, அவைதான் நம் வாழ்க்கையையும், நம்மையும் செப்பனிடும் கருவிகள். இவற்றைக் கடக்காமல் எவரும் வாழ்க்கையில் சாதித்து விட முடியாது.

மனித வாழ்க்கையில் ஏற்படக் கூடிய கஷ்டங்களைப் பற்றி மட்டுமே சிந்திப்போமேயானால், நம்மால் நிமிர்ந்து நடக்கவே முடியாது போய் விடும். எனினும் மனிதன் சளைத்தவன் அல்ல. அவன் சாமர்த்திய சாலி. **“உச்சி மீது வானி டிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே”** என்ற பாரதியை நினைத்த படியே தன் இலக்கு நோக்கி நடக்க ஆரம்பித்து விடுகின்றான்.

பொதுவாகவே கஷ்டம் என்றதும் **“எனக்கு மட்டும்தான் இப்படியெல்லாம் நடக்கிறது”**- எனச் சிலர் தன்னைத்தானே நொந்து கொள்வர். இது மிகவும் தவ றான விடயமாகும்.

எனவே காலத்திற்கேற்ப புத்திசாதுர்யமாகச் செயற்பட்டு நமது வாழ்வை வளமுள்ளதாக்குவோம்.

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- க.கிருபாகரன் -



# தென்றலின் தேடல்

## ஏ.பீர்முகம்மது
## (இரண்டாம் விசுவாமித்திரன்)



எமது நாட்டின் தமிழ் இலக்கியப் பரப்பில் நீண்டகாலமாக செயற்பட்டு வருபவர் கவிஞர் ஏ.பீர்முகம்மது அவர்கள். இளம்பிறையில் எழுதத் தொடங்கியவர். செங்கதிர் அவருக்கு புதுவெளிச்சம் பாய்ச்சியதில் இரண்டாம் விசுவாமித்திரனாக விலாசம் பெற்றார். இன்றுவரை சளைக்காது எழுதி வருகிறார். நூல் மதிப்பீட்டில் திறன் நோக்கு என்ற சொல்லை அறிமுகம் செய்தவர். மண்ணின் மொழியில் மக்களின் கதைகளைத் தரும் எழுத்தாளர். ஆய்வுக் கட்டுரைகள் மீது கூடிய கவனம் செலுத்தி வருகிறார். அகவை எழுபத்தைந்தில் காலடி வைக்கும் இரண்டாம் விசுவாமித்திரனை **"தென்றலின் தேடல்"**- வாயிலாக அழைத்து வருவதில் **"தென்றல்"**- உளப் பூர்வமாக மகிழ்கிறது.

## குடும்ப வெளி

கல்விப் பின்புலமும் இலக்கிய ஈடுபாடும் கொண்ட குடும்பத்தில் ஐ.அலியார்- ஏ.உதுமானாச்சி ஆகியோரின் புதல்வனாக 28.12.1949 இல் பிறந்தார். இவரின் தந்தை கரைவாகு தெற்கு கிராமசபை உறுப்பினராக இருந்தவர். பள்ளு பிரபந்தம் என்னும் தமிழ் இலக்கிய வடிவத்தில் கை தேர்ந்தவர். தாய் சேவல் பாட்டு மூலமும் நல்லதங்காள் கதை மூலமும் பிள்ளைகளை தாலாட்டி வளர்த்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி ஏ சமிறா. ஐந்து பிள்ளைகள். மூன்று ஆண்கள் முஜாவித், முபாசிர், முசாரஃப்- இரண்டு பெண்கள் சில்மியா, செஷ்னி. மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீது மூத்த சகோதரன். மற்றொரு சகோதரரான ஏ.முகம்மதுகான் வில்லுப்பாட்டு மற்றும் நாடகம் தயாரிப்பதில் பிரபலமானவர். ஏனைய சகோதார்களான மருதூர் அலிக்கான், ஏ.அக்பர் அலி, மருதூர் ஹசன் ஆகியோரின் கவிதைப் பங்களிப்புகள் பற்றி **"சாய்ந்தமருது வரலாறு"**- என்ற நூலில் குறிப்புகள் உள்ளன.

## கல்விப் புலம்

01. குர்ஆன் மத்ரசாவில் சமயக் கல்வியை உ.லெ. இப்றாகிம் லெப்பை என்பவரிடம் ஓதிப் பெற்றார்.
02. ஆரம்ப கல்வியை சாய்ந்தமருது வடக்கு தமிழ் கலவன் பாடசாலை (அல்-ஜலால் வித்தியாலயம்)யிலும். இடைநிலைக் கல்வியை கல்முனை ஸாஹிரா கல்லூரியிலும். உயர்தரக் கல்வியை மட்/வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.
03. பேராதனை பல்கலைக்கழக கலைப் பட்டதாரியான இவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா. கல்வி முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் உளவியல் டிப்ளோமா ஆகிய கற்கைகளுக்கான சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டவர்.

## தொழில்

கணித ஆசிரியராக 15.11.1971 ல் கல்முனை ஸாஹிரா கல்லூரியில் முதல் நியமனம் பெற்றார். பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலையில் 1972/1973 இல் கணித ஆசிரியராகப் பயிற்சி பெற்றவர். முதலாம் தர அதிபர். கல்முனை ஸாஹிரா கல்லூரியின் முதல்வராக (2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றியவர். அக்கல்லூரியின் விடுதிப் பொறுப்பாசிரிய ராகவும் இருந்தவர். பிரதிக் கல்விப் பணிப்பாளர். கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

தொலைக்கல்வி போதனாசிரியராகவும். முன்பள்ளிக் கல்வி வளவா ளராகவும் பணி செய்தவர். முப்பத்தாறு வருட சேவை முடித்து 31.08.2008 இல் ஓய்வு பெற்றார். மீண்டும் அரசாங்கம் 2010/2016 களில் மீள் நியமனம் வழங்கியது

## ஓய்வுக்குப் பின்னரான பணி

01. சிரேஸ்ட பதிவாளர் -சாய்ந்தமருது கொம்டெக் நிறுவகம் (2009)
02. கல்முனை மாநகரசபை முதல்வருக்கான கௌரவ ஆலோசகர் (2011)
03. அதிபர்-ஈஸ்ட் வெஸ்ட் சர்வதேச ஆங்கில பாடசாலை - கொழும்பு (2013)
04. நிருவாக பதிவாளர்-பாத்திமா ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரி- ஓட்டமாவடி ( 2014)

## இலக்கியப் பணி

1. இளம்பிறை சஞ்சிகையில் 1965 செப்டம்பர் இதழில் **“சிந்தனையைக் கிளறுகிறான் பாடி”** என்ற குறும்பா மூலம் கவிதை எழுதி இலக்கிய உலகில் காலடி வைத்தவர்.
2. பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை நடாத்திய கவிதைப் போட்டியில் இவர் எழுதிய **“தனிமை”** என்ற கவிதை முதலாம் இடம் பெற்று (1972) வெள்ளிப் பதக்கம் வென்றது. பத்துக்கு மேற்பட்ட கவியரங்குகளில் தலைமை ஏற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இவரின் முதலாவது சிறுகதை தினகரன் வாரமஞ்சரியில் **"இலட்சியங்கள் நிறைவேறுகின்றன"** என்ற தலைப்பில் 1980 இல் பிரசுரமானது.
4. 1987ல் கல்வி அமைச்சு நடத்திய சிறுகதைப் போட்டியில் **"ஒரு கடலை வியாபாரியின் கனவு"**- ஆறுதல் பரிசு வென்றது.
5. **"திறனாய்வு"** என்ற சொல் காலாவதியாகிவிட்டது என்றும் பதிலீடாக **"திறன் நோக்கு"** என்ற சொல் பயன்பாட்டுக்கு வர வேண்டும் என்றும் பத்திரிகைகளில் பேட்டி கொடுத்து கட்டுரைகள் எழுதியவர்.

## முஸ்லிம் அரசியல் கட்டுரைகள்

01. மாணவனாக இருந்தபோது (1967) பேச்சுப் போட்டியில் தங்கம் வென்ற இவர் பல நூல் வெளியீடுகளைத் தலைமை தாங்கியதுடன் வெளியீட்டுரை, அறிமுகவுரை, திறன் நோக்கு என பல வடிவங்களில் உரையாற்றியவர்.
02. அல்ஜலால் வித்தியாலய ஆசிரியரான அழகையா மாஸ்டர் (வே.கனக சபை) என்பவரின் ஏற்பாட்டில் மட்டக்களப்பைச் சேர்ந்த சங்கீத ஆசிரியர் எம்.எஸ். பாலு அவர்கள் முன்னிலையில் மூன்றாம் வகுப்பில் பயிலும் போதே பாடசாலை நாடகத்தில் முதன்மைப் பாத்திரம் ஏற்று நடித்தார். கலைச்சுடர் சக்காப் மௌலானா தயாரித்தளித்த திறந்தவெளி நாடகங்களில் நடித்ததான தகவல்கள் சாய்ந்தமருது வரலாறு என்ற நூலில் பதிவாகியுள்ளது.
03. தினபதி, சிந்தாமணி, தினகரன், வீரகேசரி, தினக்குரல், சுடரொளி, நவமணி, விடிவெள்ளி, சமவெளி, அரங்கம் நியூஸ், அக்கினிக்குஞ்சு, காஞ்சனா, ஓலை, விருந்து, யாழ்பிறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாவதி, மாணவ மஞ்சரி ஆகிய பத்திரிகை, சஞ்சிகைகளில் இவரது எழுத்துப் படைப்புகள் வெளியாகி உள்ளன.

## சஞ்சிகைகளில் ஆசிரியப் பணி

01. வசந்தம் (1999), நிர்வாக ஆசிரியர்.வலய கல்வி அலுவலகம். சம்மாந்துறை.
02. கலாவதி - (1973),ஆசிரியர் (தமிழ்), பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை
03. யாழ்பிறை (1973),ஆசிரியர் குழு செயலாளர். பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை
04. ஸாஹிரா (1986),பொறுப்பாசிரியர். கல்முனை ஸாஹிரா கல்லூரி.

## விருதுகள், பட்டங்கள்

01. சர்வோதய நிறுவுனர் டாக்டர். ஏ.ரி.ஆரியரத்ன அவர்களினால் சமூகம் மற்றும் கல்வி மேம்பாட்டுக்காக **"சர்வோதய விருது"** வழங்கி (2006) கௌரவிக்கப்பட்டார்.
02. அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தேசிய கைத் தொழில் அமைச்சர் எச்.எல்.பிரேமலால் ஜயசேகரா அவர்க ளினால் **"சாமஸ்ரீ தேசகீர்த்தி விருது"**- (2008) வழங்கி வைக்கப்பட்டது.
03. லக்ஸ்டோ மீடியா நெற்வேக் ஸ்ரீ லங்கா என்ற அமைப்பினால் **"தமிழ் மருத மாமணி பட்டம்"** (2011) வழங்கிக் கௌரவிக் கப்பட்டார்.
04. கவிதைகளுக்கான கிழக்கு மாகாண **"முதலமைச்சர் விருது"** (2011) இல் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. இலங்கை அரசு கலாபூஷணம் விருது (2011) வழங்கி இவரைக் கௌரவித்தது.
06. உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வுப் பொன்விழா (2016) கௌரவம் பெற்றார்.
07. கலாசார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சிடமிருந்து **"சுவதம்"** (2017) விருது கிடைத்தது
08. **"கலைமுத்து"** என்ற பட்டம் இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கத்தினால் (2020) கல்முனை பிரதேச செயலகம் மற்றும் லக்ஸ்டோ மீடியா நெற்வேக் ஸ்ரீலங்கா ஆகியவற்றுடன் இணைந்து வழங்கப்பட்டது.
09. **"பல்கலை வேந்தன்"**- என்ற பட்டத்தை (2020) மருதம் கலைக் கூடல் மன்றம் வழங்கிக் கௌரவித்தது.

## வெளியிட்ட நூல்கள்

01. கருதுகோள் பாடநூல்- (1990)
02. அனுபவம் பெறுவோம் பாடநூல் (1993)
03. கடல் ஒரு நாள் எங்கள் ஊருக்குள் வந்தது.-சிறுவர் கவிதை (2010)
04. விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும் வாழ்வியல் ஆய்வு (2013)
05. ஒரு கிராமத்து சிறுவனின் பயணம் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களின் வாழ்வியல் - தொகுப்பாசிரியர் (2013)

## திறன் நோக்கு

01. நூல் மதிப்பீட்டுக் கட்டுரைகள் (2015)
02. எஸ்.பொன்னுத்துரை : முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும் வாழ்வியல் ஆய்வு (2021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. எம்.ஏ. ரஹ்மான் : இருட்டடிப்புகளிலிருந்து வெளிச்சத்துக்கு வந்தவர் வாழ்வியல் ஆய்வு (2022)

## பொதுப் பணித்துறை

01. இணைப்பாளர், சாய்ந்தமருது அனர்த்த முகாமைத்துவ சபை (2005)
02. தலைவர் -கல்முனை கலை இலக்கிய கலாசாரப் பேரவை
03. செயலாளர் -சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார சபை (2008)
04. பொருளாளர், சாய்ந்தமருது சிரேஸ்ட பிரஜைகள் ஒன்றியம்
05. குழு உறுப்பினர்- சாய்ந்தமருது மத்தியஸ்த சபை
06. உப செயலாளர்- அம்பாறை மாவட்ட முஸ்லிம் கல்வி மாநாடு (1988)
07. செயலாளர்- முஸ்லிம் கல்வி மகாநாடு -அம்பாறை கிளை (1987)
08. தலைவர்- அம்பாறை மாவட்ட தரம் பெற்ற அதிபர்கள் சங்கம் (1990)
09. ஆலோசகர்-அகில இந்திய முகாமைத்துவ கற்கைகள் நிறுவகம் - கொழும்பு
10. செயலாளர்- சாய்ந்தமருது மக்கள் காங்கிரஸ் (People congress Saintha maruthu)-1984
11. நிறுவனர். மனிதவள அபிவிருத்திக்கான ஜீனியர்ஸ் நிறுவகம் (2008)
12. பிரதி தலைவர் , சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அதிகார சபை (2018)
13. ஆசிரியர், பத்திரிகை: ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், (அரசியல் கட்சி) -1986)
14. மருதமலர் -ஆசிரியர்-செயலாளர் மலர்க்குழு (2008)
    உபதலைவர் -சாரணர் இயக்கம்- 2006/2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் ஆற்றல்மிக்க மூத்த படைப்பாளிகள் பலரை இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். அந்த வகையில் எழுத்து இலக்கிய-சஞ்சிகை-இசை-நாட்டிய-நாடக-கிராமிய வைத்தி யத் துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையிலேயே "தென்றலின் தேடல்"- எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

15. அக்கரைப்பற்று -கல்முனை மாவட்டம் (ஆண்டுகள் குறிக்கப்படாவிடின் தற்போதும் அப்பதவியில் உள்ளதாக கொள்க)

## விளையாட்டு

01. உதைபந்தாட்ட குழு, கல்முனை ஸாஹிரா கல்லூரி (1965)
02. மெய்வல்லுனர் சம்பியன் 19 வயது ஆண்-மட்/வந்தாறு மூலை மத்திய கல்லூரி -(1968)
03. செயலாளர்-விளையாட்டுக் குழு -கல்முனை தெற்கு உப வட்டார பாடசாலைகள் (1981)
04. தலைவர்-தொலைக்கல்வி ஆசிரியர் தின விளையாட்டுப் போட்டிகள்- 1993

இவ்வாறாக எழுத்துப்பணி, கவிதை, சிறுகதை, கட்டுரை, ஆய்வு, திறன் நோக்கு, கவியரங்கத் தலைமை மற்றும் சொற்பொழிவு எனப் பல்வேறு துறைகளிலும் அகலக்கால் பதித்து இலக்கியப் பணியாற்றி வரும் ஏ.பீர்முகம்மதுவை வாழ்க! வாழ்க!! எனத் **"தென்றல்"**- மனதார வாழ்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கவிதை-

# படைத்தவனைப் பழிவாங்குவேன்!

- கவிதாயினி வாசுகி குணரத்தினம் -

என்னைப் பழிவாங்கிய
இறைவனை நான்
பழிவாங்க வேண்டும்
என் தோல்விகளிலெல்லாம்
அவன் மகிழ்வடைந்தான்
அவன் வெற்றிகளை
வீழ்த்த வேண்டுமெனில்
நான் நல்லவைகளிடம்
தோற்றுப் போக வேண்டும்
நான் அதர்மத்தைக்
கையில் ஏந்துகையில்
ஆண்டவன் எனை நெருங்கி விடுவான்
எனை வதைப்பான்
காட்சி தருவான்
கருணை கொள்வான்
தனது கால்களுக்கிடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை இருத்துவான்
தன்னை நல்லவனாக
காட்டிக் கொள்ள
என்னை வைத்துப் பயணிப்பான்
நான் அவனைச் சுமப்பேன்
கெட்டவனாகவே என்னை
எல்லோரும் பார்த்திருக்க
நான் அவன் வாகனமாகி
அவனைச் சுமப்பேன்
மயிலாக எருதாக
எலியாக சிங்கமாக
இன்னும் எதுவெதுவோவாகி
சுமக்கும் போது
அவன் நல்லவைகள்
என் கெட்டவைகளிடம்
தோற்றுப் போகும்!

உங்கள் "தென்றல்"– சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கெனத் தரமான கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் கவிதைகள் வரவேற்கப் படுகின்றன.

(ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– சிறுகதை –

# தண்டனை யாருக்கு?

- செல்வபாலா -

அம்மா என்னைப் போட்டு அடித்தாள்.

“வயசு பத்துக்கு மேலாகுது. ஒரு காரியத்தை ஒழுங்காகச் செய்யத் துப்பில்லை! அடிவாங்கிய ஆத்திரம். அதுவும் நியாயமற்ற ஒரு செயலுக்காக அடிவாங்கிய ஆத்திரம்.

**“இல்லம்மா, அவன்!”**

என் வாயிலேயே அடி விழுந்தது.

**“அவனோ..!”**

**“அவன்ர வயசென்ன? உன்ர வயசென்ன? அவன் உன்ர மாமன்டி..!”**

பொரிந்து தள்ளியபடியே விளாசினாள் அம்மா.

**“ஐயோ விடக்கா.. விடக்கா..”**

நான் உண்மையைச் சொல்லி விடுவேனோ என்ற பயத்தில் பதை பதைத்து இடையிடையே குறுக்கிட்டான் மாமன்.

**”இல்ல தம்பி.. இப்படியே விட்டா பயம் விட்டுப் போய் விடும். செய்யிறதையும் செஞ்சி போட்டு மரியாதையே இல்லாம என்ன திமிர் பார்த்தியா இவளுக்கு..?”**

**”விட்டுத் தள்ளுக்கா குழந்தைதானே..?”**– என்று குழைக்கிறார்(ன்) மாமன்.

எனக்கு மனம் கொதித்தது.

**“இப்போதா நா உனக்கு குழந்தையா தெரியிறேனா?”**– என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமாகக் கத்த வேண்டும் போல இருந்தது. ஆனால் முடியவில்லை.

**"அட.. இவளா குழந்தை! பார்த்தியா எப்படி விறைப்பா நிற்கிறாள்ளுன்னு.."**

**"என்ன அம்மாவோ இவ..! என்ன எதுவுமே சொல்ல விடாம எதையுமே கேக்காம நா பிழ செஞ்சிட்ட மாதிரி தண்டிக்கிறது லேயே குறியா இருக்கிறாளே..!"**

கூடவே வெற்றிலையை வாயில் அதக்கியபடி பாட்டியும் சேர்ந்து கொண்டாள்.

என்னைத் திட்டும் சாக்கில் மருமகளைக் குறை சொல்வதில் கிளவிக்கு என்ன சந்தோசமோ..?

**"எல்லாமே நீ குடுக்கிற இடம்தா..!"**

பதிலுக்கு அம்மாவும் விடவில்லை. மாமியார் மீது பாய முடியுமா? அதனால், மீண்டும் என் மேல் பாய்ந்தாள்.

**"பாரடி..! உன்னால எனக்குத்தா கெட்ட பேர். என்ர வயித்தில வந்து பிறந்தியே..!"**- என்று இழுத்தாள் அம்மா உடனே.**"எனக்கு வாற கோபத்துக்கு"**

அப்பா முறைத்தபடி இருந்த இடத்திலேயே கர்ஜித்தார்.

இங்க நடக்குதுனு குழப்பமாயிருக்கா? நடந்தது இதுதான்.

ஏதோ வேலை விஷயமாகப் பல மாதங்களின் பிறகு ஊரிலிருந்து வந்திருந்தார் மாமா.

வந்த வேலை முடியவில்லை. இன்னும் இரண்டு நாட்கள் நிற்க வேண்டிய சூழ்நிலை.

**"நம்ம வீடுதா இருக்கே தம்பி, இங்கேயே தங்கிக்கப்பா"**- என்றாள் அம்மா.

அம்மாவோட சொந்தக்காரர்கள் வந்து விட்டால் அவங்களுக்கு ஒருவித சந்தோசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைய பொழுது சந்தோசமாயிருந்தது. கோழி அடித்துக் குழம்பு வைத்து, சாப்பாடும் தடபுடலாக இருந்தது.

நானும் **"மாமா.. மாமா.."**- என்று அவரோடு ஒட்டிக் கொண்டேன். மறுநாள் காலை, ஞாயிற்றுக்கிழமை என்பதால், பள்ளிக்கூடம் இல்லை. இருந்தாலும், விடிய எழும்பிப் படிப்பது என்னுடைய வழக்கம்.

**"சுவேதா.. அடியேய்.. சுவேதா..?"**- அடுக்கலையிலிருந்து அம்மா கூப்பிட்டாள்.

**"என்னம்மா..?"**

**"இஞ்சை வா பிள்ள. இந்த தேத்தண்ணியக் கொண்டு போய் மாமா கிட்ட குடு. சுடச்சுடக் குடிச்சாத்தான் அவனுக்குப் பிடிக்கும்"**- என்றாள்.

ஆவி பறக்கும் தேநீர்க் கோப்பையுடன் மாமா படுத்திருந்த அறைக்குள் நுழைந்தேன். அவர் இழுத்து மூடிப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தார்.

**"மாமா.. மாமா.."**- கூப்பிட்டேன். எழும்பவில்லை. தேநீர்க் கோப்பையை அருகே இருந்த மேசையில் வைத்து விட்டு மாமாவைத் தட்டியெழுப்பினேன்.

**"எழும்புங்கோ மாமா..! தேத்தண்ணி கொண்டு வந்திருக்கேன்..".**

சோம்பல் முறித்தபடி எழுந்தார்.

**"அடடே சுவேதாக் குட்டி.."**- என்று சிரித்தார்.

நானும் சேர்ந்து சிரித்தேன்.

பின்னர் தேநீர்க் கோப்பையை எடுத்துக் கொடுக்க மேசைப் பக்கம் திரும்பினேன்.

திடீரென்று மாமா, பின்பக்கமாக என்னைக் கட்டிப் பிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அம்!"**- என்று கத்த வாயெடுத்த போது பொத்தியிருந்ததால் கத்த முடியவில்லை.

பின்பக்கமாக என்னைக் கட்டிப் பிடித்தபடி குனிந்து என் கன்னங்களில் கொஞ்சினார். ஒரு கை வாயைப் பொத்தியிருக்க, மறுகை என் உடம்பில் ஊரத் தொடங்கியது.

**"தப்பு இது ரொம்பத் தப்பு.."**- என்று என் மனம் ஓலமிட்டது. சட்டென்று எங்கள் வகுப்பு டீச்சர் சொன்னது ஞாபகம் வந்தது.

**"பிள்ளைகளா உங்கள யாராவது தப்பாத் தொட்டா சத்தம் போட்டு ஆட்களைக் கூப்பிடுங்க.. அப்படி முடியல்லனா பக்கத்துல என்ன கிடைக்குதோ அத எடுத்து ஆள அடிச்சிட்டு தப்ப முயற்சி செய்யுங்க.."**

திமிறியபடி சற்றும் முற்றும் பார்த்தேன்.

**"ஐயோ எதுவுமில்லையே"**- மாமாவின் கைகள் எல்லை மீறின.

**"தப்பு.. தப்பு.."**- என்று என் மனம் அடித்துக் கொண்டது.

**"ஏதாவது செய்ய வேணும்"**- என்று மனம் பரபரக்கிறது.

அப்போது மேயையில் இருந்த ஆவி பறக்கும் தேநீர்க் கோப்பை கண்ணில் பட்டது. அடுத்த கணம் ஒரு கையை உயர்த்தி, தேநீர்க் கோப்பையை எடுத்து மாமாவின் முகத்தில் ஊத்தி விட்டேன்.

**"ஐயோ.. அம்மா.."**- என்று அலறியபடி பின்னால் சாய்ந்தான். உடனே நான் வெளியே ஓடினேன்.

மாமாவின் அலறல் கேட்டு அறைக்குள்ளே வந்த அம்மாவிடம், **"அக்கா எழும்பறப்போ தேத்தண்ணி தட்டுப்பட்டு முகத்தில ஊத்திருச்சி"**- என்பது போல கதை சொல்லி நம்ப வைத்து விட்டான். ஏதோ படுத்திருந்தவன் மேல் நான் சுடுதண்ணியை ஊத்தி விட்ட மாதிரி ஆளாளுக்கு திட்டி அடித்தார்கள்.

ஊர் உலகத்தில் சிறு பிள்ளைகளுக்கு நடக்கும் கொடூரங்களை பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் பார்த்து விட்டு **"அட..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சண்டாளப் பாவிங்களா நாசமாய்ப் போவீங்க..”**- என்றெல்லாம் திட்டித் தீர்க்கும் வீட்டார்கள் தன் வீட்டினுள் நடந்ததை ஆராய்ந்து அறிய முடியாதவர்களாக உறவுகள் மேல் கொண்டுள்ள நம்பிக்கையால் அவர்கள் மீது உள்ள தவறை உணர மறுக்கிறார்கள். இதனால் தான் மாமன், சித்தப்பன், பேரன் என்று பல உறவுகளால் சீரளிக்கப் படும் சிறு பெண் பிள்ளைகளின் கதைகள் வெளியே வருவதில்லை.

நல்லவேளை, ரீச்சர் சொன்னது அந்த நேரத்தில் ஞாபகம் வந்ததால், அந்த மாமனுக்குத் தகுந்த தண்டனை கொடுத்த திருப்தியோடு அம்மாவின் அடிகள், பாட்டியின் திட்டுக்கள், அப்பாவின் முறைப்பு எதையும் பெரிதுபடுத்தாமல் நிமிர்ந்து நின்றேன்.

யாருக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமென்ற விவஸ்தையே இல்லாதவர்களுக்கு நான் ஏன் பயப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கவிதை-

# சொல்லாமலே!

- எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா -

சட்ட திட்டம்
சம்பிரதாயம் சகலதும்
நிரம்பி வழிகிறது!

மனிதனை வளர்க்க
சட்டம் உருவாக்க மனிதனோ
தான்தோன்றித்தனமாய்!

தடயங்கள் இன்றியே
ஆறறிவும் தோற்ற விடயங்கள்
ஏராளம் தாராளம்!

ஐயறிவின் விஷேடம்
முற்றிலும் முக்கியத்துவம்
உணர்வு ரீதியாக உணர்ந்து
தலைகாக்க தலைக்கவசத்துடன்
நாட்டின் சட்டதிட்டம் பேணியே!


மனிதனோ தலை காக்கவல்ல
தலைக்கவசம் அணிதல்
தலையில் ஏதும் இருந்தால்தானே
தலை காப்பது!

யாரை சொல்லி நோக
தான் ஒரு நல்ல வளம்
நாட்டின் பலம் என்றுணர்ந்தால்
பிறர் சொல்லியல்ல
தலை காப்பது
சொல்லாமலே..!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென்றல்" சஞ்சிகையின் 60 ஆவது இதழ் வெளியீடும், கலைஞர் கௌரவிப்பும்!

-கீரன்-



மட்டக்களப்பு கல்லடியிலிருந்து கடந்த பதினைந்து ஆண்டுகளாக வெளி வந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கும் **"தென்றல்"**- சஞ்சிகையின் அறுபதாவது இதழ் வெளியீடும், கலைஞர் கௌரவிப்பும் மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் 02.09.2023 அன்று இடம்பெற்றது.

**"தென்றல்"**- சஞ்சிகை ஆசிரியர் கதிரேச பிள்ளை கிருபாகரன் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபா லரெத்தினம் பிரதம அதிதியாகவும், மட்டக் களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் சிறப்பு அதிதி யாகவும் கலந்து சிறப்பித்தனர்.




**"தென்றல்"** - சஞ்சிகை ஆசிரியர் கதிரேச பிள்ளை கிருபாகரனால் **"தென்றல்"**- கொடி யேற்றப்பட்டு ஆரம்பமான நிகழ்வில், அகவிளக்கேற்றல், அகவணக்கம், **"தென்றல்"** கீதம் இசைத்தல், அதிதிகள் உரை ஆகியன இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதன்போது "தென்றல்"- சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரனால் வெளியீடு செய்யப்பட்ட அறுபதாவது இதழின் முதல் பிரதியினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும், கொடைவள்ளலுமான சைவப்புரவலர் விநாயக மூர்த்தி றஞ்சிதமூர்த்திக்கு வழங்கினார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து அவர் சிறப்பு மற்றும் கௌரவப் பிரதிகளை **"வீசுதென்றல்"**- விருது பெற்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கினார்.






இதனைத் தொடர்ந்து அதிதிகளால் நாடளாவிய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட மூ.அருளம்பலம் (ஆரையம்பதி), செ.குண ரத்தினம் (அமிர்தகழி), ஆ.மு.சி.வேலழகன் (திருப்பழுகாமம்), கா.சிவலிங்கம் (பால மீன்மடு), இ.நல்லையா (களுதாவளை), திருமதி மாலினி அஜந்தன் (யாழ்ப்பாணம்), திருமதி ஜெகதீஸ்வரி நாதன் (தம்பிலுவில்), மா.திருநாவுக்கரசு (குருக்கள்மடம்), மீரா முகைதீன் ஜமால்தீன் (ஏறாவூர்), திருமதி இந்திராணி புஸ்பராஜா (கல்லடி), பரதன் கந்தசாமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(கல்முனை), திருமதி வேதநாயகி குணநாயகம் (களுதாவளை), செ.துரையப்பா (துறைநீலாவணை), த.கோபால கிருஸ்ணன் (மட்டக்களப்பு), வீ.வீரசொக்கன் (உடப்பு), தம்பி சாகித் சித்தி பரிதா (சிலாபம்), மி.அருள்மொழிராஜா (நிலாவெளி), ஏறாவூர் தாஹிர் (ஏறாவூர்), எஸ்.இரவீந்திரன் (ஊறணி), முகம்மது லெவ்வை முகம்மது பாறூக் (பாலமுனை), க.ரெட்ணையா (கன்னன்குடா), திருமதி சுந்தரமதி வேதநாயகம் (நொச்சிமுனை), வி.பத்மஸ்ரீ (ஆரையம்பதி), ஆத்மராஜா றூத் சந்திரிக்கா (கோட்டைக்கல்லாறு), பெ.ஹரிச்சந்திரா (மட்டககளப்பு), சீ.தரணீஸ்வராநந்தா (ஏறாவூர்), மா.சசிகுமார் (கன்னன்குடா), அனோஜா பவளேந்திரன் (களுவாஞ்சிகுடி), சி.புரவர்த்தனி (குறிஞ்சாமுனை), எம்.சிவகுமார் (கல்லடி), ம.புருஷோத்தமன் (திருப்பழுகாமம்), ச.மதன் (புதுக்குடியிருப்பு), த.இன்பராசா (புதுக்குடியிருப்பு), கிறிஸ்தோபர் கிறிஸ்டிராஜ் (கல்லடி), ஏ.எல்.எம்.சலீம் (நிந்தவூர்), க.பகீரதன் (இருதயபுரம்), கு. சுபஜன் (செங்கலடி) உ.உதயகாந் (கல்லடி), கு.கோடீஸ்வரன் (அமிர்தகழி), தே.லோகவியாசன் (புதுக்குடியிருப்பு), க.பாக்கியராஜா (மட்டக்களப்பு), வீ.றஞ்சிதமூர்த்தி (களுவாஞ்சிகுடி) ஆகியோர் **"வீசுதென்றல் விருது"** மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட் டனர்.

நிகழ்வில் விருது பெற்ற கலைஞர்கள் சார்பில் கதிரவன் த.இன்பராசா பாராட்டுரையையும், **"தென்றல் சஞ்சிகை"**- ஆசிரியர்பீட உறுப் பினர் த.செல்வராணி நன்றியுரையையும் ஆற்றினார்.

**தென்றலின் வளர்ச்சிக்கு உங்களால் இயன்ற பங்களிப்பை வழுங்கிடுங்கள்.**

**- ஆசிரியர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நிகழ்வுகளை சிரேஷ்ட ஊடகவியலாளர் பெ.ஹரிச்சந்திரா தனது வசீகரக் குரலால் திறம்பட தொகுத்து வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கவிதை-

# வாழ்வின் நிலை!

- ஏறாவூர் தாஹிர் -

தினசரிப் பணிகளில் மனநிறைவேறியும்,
இன, சனவுறவில் இனிய பல்லூறியும்
இல்லறப் பொய்கையின் நல்லறப் பூக்களின்
இனிமையில் நறுமணம் இதம்பட வருடியும்
பட்டம் பதவிகள் காலடி தேடியும்
பண்பொழுக்கம்மிகு நண்பர்கள் கூடியும்
வசதியும் வாய்ப்புமாய் வருமதி நாடியும்
வனப்புற வாழ்வெழில் சிறப்புற வோடியும்
ஏதோ.. ஏதோ... இல்லாதொரு குறை!
எதையோ.. எதையோ.. இழந்த பின் இந்நிலை!
எல்லாம் இருப்பினும் எல்லாம் நடப்பினும்
இல்லாதொரு நிலை சொல்லாதொரு நிலை
கங்கையின் பொங்கலும் களிறிடும் பிளிறலும்
வேங்கையின் உறுமலும் எரிமலைக் குமுறலும்
தனிமையின் பொருமலில் பகரவும், பகிரவும்
பகர்தலால் பகிர்தலால் விழல் நீராவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பகற் காணலாய் நத்தையின் ஊர்தலாய்
நம்பிக்கை வைத்தவை ஆவதும் போவதும்...
ஏதோ.. ஏதோ.. இல்லாதொரு குறை!
எதையோ... எதையோ.. இழந்தபின் இந்நிலை!
விழிவழி நீர்மன வாசலைத் தொடுவதும்
விரிகதிர் வெம்மையாய் வெண்மதி சுடுவதும்
விடை விடை யாதவோர் வினா விடைமாய்வதும்
விடிபொழு தேறியும் விம்மலிற் காய்வதும்
இளம்பிறைக் கற்பனை கலைவதும் தேய்வதும்
இன்னபிற துயர் மழையிலே தோய்வதும்
ஒலி, ஒளி அலைகளில் கனவுகள் கரைவதும்
இனியொரு வழியிலாப் பொழுதுகள் கழிவதும்
ஏதோ.. ஏதோ.. இல்லாதொரு குறை
எதையோ.. எதையோ... இழந்த பின் இந்நிலை!

அன்பான எழுத்தாளர்களே, கவிஞர்களே, ஊடகவியலாளர் களே! "தென்றலின் தேடலில்"- பிரசுரிப்பதற்காக தங்களின் விபரங்கள் மற்றும் புகைப்படங்களை அனுப்பி வையுங்கள். விபரங்கள் 05 பக்கங்களுக்குக் மேற்படாமல் இருக்க வேண்டும்.

(ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறுங்கதை -

# வாழ்வின் நிலை!

-வேல் அமுதன்-


**கா**லி றோட் மணிங்பிளேஸ் சந்திக்கு மினிபஸ் நேரத்திற்கு வந்து விட்டது. சந்தியில் பஸ்ஸிலிருந்து இறங்கிய தாமோதரம்பிள்ளையும் அவரது மனைவி தங்கம்மாவும் போக வேண்டிய இடம் கம்டன் லேனிலுள்ள அவர்களது மகளின் வீடு அவர்களுக்குப் பயணக்களை. மகளின் வீட்டிற்கு நடந்து போகத் தெம்பில்லை.

சொல்லி வைத்தாற் போல் அவ்வழியே **"ராக்ஸி"**- ஒன்று வந்தது. அதில் தொத்திக் கொண்டனர். சில நொடிப் பொழுதில் அவர்களின் மகள் வீட்டு வாசலில் **"ராக்ஸி"**- போய்நின்றது.

**"எவ்வளவு?"**- தாமோதரம்பிள்ளை **"ராக்ஸி றைவரிடம்"**- விசாரித்தார். **"தெசிய பணகாய்"**-
**"அபி மிப்ரி தமாய் குடுக்கிறது"**. தாமோதரம்பிள்ளைக்குப் பெரிதாகச் சிங்களம் தெரியாது. **"ராக்ஸி றைவருக்கு"**- தமிழ் தெரியும் போலத் தெரியவில்லை.

**"பாய், பாய் உதே பரந்தறே நேத? அப்பி ஹன்னே தெசீய பணஹய்".**
**"உங்கக் வடி. அபி ஹன்றெட் தென்னம்".**
**"பாய்.. பாய்.. தெசிய பணகாய் ஒனமாய்".**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதேவேளை தாமோதரம்பிள்ளை திரும்பித் தங்கம்மாவைப் பார்த்தார். அவருக்குக் கோபம் கோபமாக வந்தது. அவளின் கழுத்தில் பதினான்கு தங்கப் பவுண் பளபளத்தது. மஞ்சள் கொடியில் தாலியைத் தொங்க விடும்படி பல முறை வேண்டியும் அது அதுவரை பலிக்கவில்லை. **"ராக்ஸி றைவரைப்"** - பார்த்தார். அவனின் முழி அவன் மேல் சந்தேகத்தை ஏற்படுத்தியது. கைக்கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தார். விடிவதற்கு இன்னும் ஒன்றரை மணித்தியாலம் இருந்தது.

அவன் கேட்ட இருநூற்று ஐம்பது ரூபாவைத் தனது **"மணிபேஸ்"**-சிலிருந்து இழுத்தெடுத்து **"ராக்ஸி"**- காரனின் கையில் திணித்தார். அந்நேரம்.....தொலைவில் வெளிச்சம் தெரிந்தது. அது அண்மித்த போது உற்றுப் பார்த்தார். அது ஒரு **"மீற்ரேட் ரக்ஸி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கவிதை-

# கல்விக் கலைமகளே!

-சதாசிவம் சதீஸ், நாவற்காடு-

வித்தைகளின் உத்தமியாய்
தத்துவத்தில் கண்ணகியாய்
உயிரோடு உயிர் கலக்க
கல்வியை நீ தந்திடம்மா!

கலைகளை அருளிச் செய்து
பாமரரை மாற்றி நீயும்
கல்விக் கண்ணைத் திறக்க வைத்த
கலைவாணி நீயம்மா!

சத்தியத்தின் முன்னே நின்று
தலை வணங்கும் பக்தனுக்கு
கருணை உள்ளம் கொண்டவளாய்
காத்திடவே வரம் அளிப்பாய்!

சொற்பனங்கள் பொங்கிடவே
சொல்லொனா இன்பம் தனில்
இருகரம் கூப்பி நின்று
வாழ்த்துகிறேன் வாருமம்மா!

கொள்ளை கொள்ளும்
அடியோர்க்கெல்லாம்
உன் வரத்தை அளித்திட்டாய்!
உன்பாதம் சரணமம்மா!

கண்மணி போல் கல்வியை- நீ
காத்திடுவாய் கலைவாணியம்மா!
ஊற்றெடுக்கும் ஆறாக
அருள் தருவாய் நாயகியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கட்டுரை -

# பாரம்பரியம் தொலைத்த வாழ்க்கை!

**-இளம்பிறை யோகன்-**

மனிதன் என்பவன் தன் சமுதாயத்திலே இப்படித்தான் வாழ வேண்டுமென்ற ஒரு வரையறைக்குள்ளே வாழப் பழகியவன். தனக்கென்ற ஒரு கொள்கை, தனக்கென்ற ஒரு மதம், மொழி, கலை, கலாசாரம் என இன்னும் பல. இதையே தனக்குப் பின் தன் பரம்பரைகளும் பின்பற்ற வேண்டுமென எண்ணி, கடைப்பிடித்து வருகின்றனர்.

ஆனால், அண்மைக்காலமாக வெளிநாட்டின் நாகரிகம் என்ற கிருமி நம் நாட்டுக்குள் புகுந்து பரவியதால், நமது இளைய தலைமுறையி னரை தமது பாரம்பரிய வாழ்க்கையை விட்டும், விலகி வாழ வழி செய்து வருகிறது. இதனால் தமது மதம் சார்ந்த வாழ்க்கை, கலாசாரம், மொழி என்பனவெல்லாம் அவர்களது பாரம்பரியத்திலி ருந்தும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து இன்று மெல்ல மெல்லவாக மறைந்து வருவது கண்கூடு. இதை இன்றைய பெரியோர்கள் தெரிந்தும், அறிந்தும் இவர்களாலே இன்றைய இளம் தலை முறையினரை தமது பாரம்பரியத்துக்குள் வைத்து அவர்களைக் கட்டுப்படுத்த முடிவதில்லை.

இந்நிலையில் இந்து மதத்தை எடுத்துக் கொண்டால், இவர்கள் தமது பாரம்பரியத்தை விட்டு விலகி வாழ விரும்புவதில்லை. பெரியோர்கள் தொட்டு இளைஞர்கள், சிறுவர்கள், யுவதிகள் என அனைத்துத் தரப்பினரும் இதைக் கடைப்பிடிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் பெண்கள் தலையில் பூச்சரம், நெற்றியிலே குங்குமம், உடையிலே பட்டுச்சேலை எனவும், ஆண்கள் என்றால் நெற்றியிலே விபூதியும், சந்தனப் பொட்டும், வேட்டி, சால்வை அணிந்த தோற்றம். இதன்படியே இவர்கள் வெளியிலும் செல்வார்கள்.

ஆனால், இன்றைய இளைய தலைமுறைகளிடையே இந்தத் தோற்றத்தைக் காண முடிகிறதா? இல்லவே இல்லை. அவர்களுக் கான பாரம்பரிய அடையாளங்கள் எதையுமே அவர்களிடத்தில் காணக் கிடைப்பதில்லை. காரணம் இவர்கள் நட்புக் கொள்ளும் சமுகம் அல்லது தொழில் புரியும் இடம் என்பவற்றில் சங்கமமாகின்ற போது இவர்களின் பாரம்பரியத் தோற்றம் அவர்கள் முன் ஏளனப் பார்வையாகத் தோற்றமளிப்பதை இவர்கள் உணர்கின்றார்கள் போலும். அதனால் அவர்களோடு தாமும் அதுபடியே வாழத் தம்மை மாற்றிக் கொள்கின்றார்கள். இது இன்றைய சூழ்நிலையின் சூழ்ச்சி என்று கூட, சொல்லலாம். அதனால் தொன்று தொட்டு வரும் தமது பாரம்பரிய வாழ்க்கையை அவர்கள் விட்டு விலகும் நிலை ஏற்பட்டுள்ளது எனலாம்.

இது மட்டுமல்ல. தமிழர்களின் பாரம்பரியத்திலே திருமணம் என்றாலே ஜாதகப் பொருத்தம்தான் முன்னிலை வகிக்கும். இதில் பத்துப் பொருத்தம் பொருந்த வேண்டும். இல்லையேல் ஐம்பது வீதத்துக்கு மேலாவது இருக்க வேண்டும்.

அது அப்படிப் பொருந்தாது விட்டால், அந்தத் திருமணம் பெரி யோர்களால் நிச்சயம் செய்யப்படாது. இதனால் தாம் விரும்பிய கணவரையோ, மனைவியையோ தேடிக் கொள்ள முடியாத நிலையுள்ள இளம் தலைமுறையினர் இந்தப் பாரம்பரிய முறை களையெல்லாம் ஒரு புறம் தள்ளி வைத்து விட்டு, தாம் விரும்பியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தாமே தேடி, தமது வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளனர். இந்நிலையில் இவர்கள் தமது பாரம்பரியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது புலனாகின்றுது.

ஏன், இன்று தமிழர்களின் மரணச் சடங்கை எடுத்துக் கொண்டாலும் கூட, ஒரு தந்தை இறந்து விட்டால், வெளிநாட்டில் தொழில் புரியும் மகன் வந்து தனது தந்தைக்காக மொட்டையடித்து, கொள்ளி வைக்கத்தான் முடிகிறதா? அவசரமான இந்த உலகிலே தனது வேலையை விட்டும், அவசரமாக வந்து தந்தைக்குக் கொள்ளி வைப்பதற்கும் அவனால் முடிவதில்லை. இதை இன்றைய தொழில்நுட்ப உலகில் அவனும் **"இன்டர்நெட்டில்"**- தந்தையின் மரணச் சடங்கைப் பார்த்து விட்டு, ஓர் துளிக் கண்ணீர் விட்டு விட்டு, தனது வேலையைக் கவனிக்கும் நிலைமையும் உள்ளது. இவனுக்கு இது போன்ற இக்கட்டான சூழ்நிலை ஏற்படும் போது பாரம்பரியம் என்பது இவனைக் கட்டுப்படுத்தினால் அவனால் அதை ஏற்பதை விட எதிர்ப்பதையே விரும்புவான்.

எனவேதான் இது போன்ற காரணங்களாலும், தமது சூழ்நிலையாலும் தமது பாரம்பரிய வாழ்க்கையோடு ஒன்றி, வாழ்வதை விட அவனால் ஏற்றுக் கொள்ள முடியாமல் அதை எதிர்த்து வாழ வேண்டுமென விரும்புவான்.

இந்நிலையில் இது போன்ற காரணங்களால் இன்றைய தலைமுறையினர் தமது பாரம்பரியத்தை ஏற்பதில்லை. அதில் உண்மைகளும் உள்ளன. எனவே இந்தப் பாரம்பரியத்தை இவர்கள் வெறுக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-நீத்தார் நினைவு-

# தமிழ்த்துறை மேம்பாட்டில் அரும்பணியாற்றிய பேராசிரியர் செ.யோகராசா!



- பழுவூரான் -

ஈழத்தமிழ் இலக்கிய உலகு இன்னும் ஒரு படைப்பாளியை விமர்சகரை-ஆய்வாளரை-தகைமைசார் பேராசிரியரை இழந்து நிற்கின்றது. இந்நிலையில் அன்னார் விட்டுச் சென்ற பணியைத் தொட்டுத் துலங்க வைப்பதே அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் செய்யும் பிரார்த்தனையாகும்.

பேராசிரியர் செ.யோகராசா அனைவராலும் அறியப்பட்ட பன்முக ஆளுமை கொண்டவர். பழகுவதற்கு இனிமையானவர். பேராசிரியராகக் கல்விப் புலத்தில் இருந்த போதிலும், ஈழத்தின் கலை மற்றும் இலக்கியப் பரப்பில் அகலக் கால் விரித்து இலங்கையில் மட்டுமன்றி, கடல் கடந்து பல நாடுகளிலும் தமி ழின் சிறப்பை-பெருமையை பறை சாற்றிய பெருமை அவருக்கே உரித்தானது எனக் கூறினால் அது மிகையாகாது.

இலங்கையிலிருந்து வெளிவரும் பத்திரிகைககளான வீரகேசரி, தினக்குரல் மற்றும் தினகரனிலும், சஞ்சிகைகளான செங்கதிர், தென்றல், கதிரவன் போன்றவற்றிலும் நடைமுறை இலக்கியம் சார்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு ஆக்கங்களை எழுதியுள்ளார்.

அந்த வகையில் **"தென்றல்"**- சஞ்சிகையில் **"மாணவர்களே சிறுகதை எழுதுவோம் வாருங்கள்!", "கவனிக்கப்படாத- கவனிக்கப்பட வேண்டிய புலவர்கள்"**- ஆகிய தொடர் கட்டுரைகளையும், மேலும் பல கட்டுரைகளை இலக்கியம் சார்ந்தும் எழுதியுள்ளார். இவ்வாறான பெருந்தகைகளாலேயே 2021 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் சிறந்த சஞ்சிகையாகத் **"தென்றல்"**- தேர்வாக வழிசமைத்தது.

இவ்வாறாக ஈழத்தில் மட்டுமன்றி, புலம்பெயர்ந்த நாடுகளிலும் தனது எழுத்தாற்றல் மற்றும் பேச்சாற்றலால் என்றுமே மறக்க முடியாத பெரும் விருட்சமாகத் திகழும் அமரர் பேராசிரியர் செ.யோகராசாவுக்குத் **"தென்றல்"**- தலை சாய்த்துத் தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

மட்டக்களப்பு கல்லடியிலிருந்து செய்திகளை நடுநிலையாக வெளிக் கொணரும் "BATTI MEDIA.LK" யுடன் இணைந்திருங்கள்.


(ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வரவு

நூல் :- இலக்கியத் தென்றல் கோவிலூர் செல்வராஜன் பொன்விழா சிறப்பு மலர்

வெளியீடு :- மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்




இந்நூல் கோவிலூர் செல்வராஜன் கலை, இலக்கியம், ஊடகத்துறை எனப் பல்வேறு துறைகளில் சாதித்த விடயங்களை துறை சார்ந்தோர் தெரிவித்த கருத்துக்களின் ஆவணப் பெட்டகமாக அமைந்துள்ளது எனக் கூறினால் அது மிகையாகாது.

அந்த வகையில் முழு நேர இலக்கியச் செயற்பாட்டாளராக விளங்கும் இவர் தொட்டுச் செல்லாத துறைகளே இல்லை எனலாம். கதை, கட்டுரை, கவிதை, விமர்சனம், சஞ்சிகை ஆசிரியர் போன்ற எழுத்துப் பணிகளிலும், அதற்கப்பால் பாடகர், நடிகர், இசையமைப்பாளர், அறிவிப்பாளர் மற்றும் பேச்சாளர் போன்ற ஆற்றுகைத் திறனாளியாகவும் உலகை வலம் வரும் அற்புதமானவர் எனலாம்.

இத்தகைய அற்புதங்களைத் தன்னகத்தே கொண்ட கோவிலூர் செல்வராஜன் தொடர்பில் உலகெலாம் பரந்து வாழும் பல்வேறு துறை சார்ந்தோர் எழுதிய குறிப்புக்களைத் தாங்கி வெளிவந்துள்ளது இந்நூல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் நெஞ்சம்

ஒவ்வொரு தினமும் அதில் ஒவ்வொரு கணமும் செகமெங்கும் **"தென்றல்"**- வீச்சை அகலப் பரப்பி, பிரபஞ்சத்தையே பிரகாசமாக்கி வைக்கும் **"தென்றல்"**- ஆசிரியரின் புதியதொரு பரிணாமமோ இது என எண்ணத் தோன்றும் வகையில் உதித்தெழுந்த **"தென்றல்"** ஆசிரியரே. என்னகத்துக்கும் வெளிச்சம் தரும் பொருட்டு, என் வீட்டுக் கதவைத் தட்டினாயே.

உனது முதல் ஐம்பது சுகந்தங்களும் என்னில் பட்டிராதபோது அதன் ஐம்பத்தொராவது மற்றும் ஐம் பத்திரண்டாவது சுகந்தம் என்னைத் தொட்டு என்மனதெங்கும் ஒரு பூரிப்பை ஏற்படுத்தியது. ஆனாலும் முதல் ஐம்பது சுகந்தங்களும் என்னை வந்தடையாதது கவலையே. எப்படியோ இனி **"தென்றல்"**- என் மேனியில் படுகிறது. என் மனதெங்கும் தொடுகிறது. ஒரு புதுத்தென்பு எனக்குள் ஏற்படுகிறது.

என் முகவரியைத் தேடி வந்து என்னகத்திற்கு ஒளி கொடுத்த **"தென்றலே"**- உனக்கு ஒரு கோடி நன்றி பூத்தூவல்கள். இந்நிலையில் ஒரு சிறு வேண்டுகோள். உனது முதல் ஐம்பது சுகந்தங்களும் என்னில் பட வேண்டும். அவற்றை எனக்கு அனுப்பி என்னில் படச்செய்வாயா? எதிர்வரும் புதுவருடத்திலிருந்து உன்னில் உறுப்புரிமை பெற்று என்னை உனக்கும், உன்னை எனக்கும் உரிமையாக்கிக் கொள்வோம். அதுவரை உன் சுகந்தங்களை என் மூச்சோடு இணைத்து வைப்பாயா?

இந்நிலையில் உன் உள்ளடக்கங்கள் அனைத்தும் என்னுள் அடக்கம். இனித் தொடர்ந்தும் உன்னை வாசிப்பேன்.

என்றும் உன் வாசகி
த.கீர்த்தனா, செங்கலடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements from*

# Vijay Construction & Co.

Quality work. One name. One legend.

**Services: Civil Engineering constructor, Distributor for Nestle Products, Dealer of Mitsui & Tokyo super cement, Transport & Heavy Machinery Equipment Services, General Merchant & Commission Agent**

Head Office:
130/1, Trinco Road, Batticaloa.
Tel. No: 0652223292
Fax No: 0652223045
e-mail: vijayconstvrm@yahoo.com

Branch Office:
ThillaiVasam, Paddiruppu,
Kaluwanchikudy
Tel. No: 0652250002
Fax No: 0652250002



எபெக்ஸ் அச்சகம்
மருதமுனை
0772271404/0777620260

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org